# World Patient Safety Day commemoration
## at Chengalpattu Government Medical College & Hospital
## Chengalpattu, Tamilnadu, India—17-Sep-2019






Facility & Fire Safety team takes the Pledge



Medication Safety team takes the Pledge




Surgical Safety team takes the Pledge



Obstetrics Safety team takes the Pledge



Laboratory Safety team takes the Pledge



HIC team takes the Pledge



Chengalpattu Government Medical College & Hospital takes the Pledge



Mentored by CAHO through Sree Renga Hospital, Chengalpattu — a CAHO Centre for Quality Promotion — Chengalpattu Government Medical College & Hospital commits itself to Patient Safety via activation of various teams.

# World Patient Safety Day Workshops
## at Chengalpattu Government Medical College & Hospital
## Chengalpattu, Tamilnadu, India — 17-Sep-2019


Workshop on Fire Safety


Workshop on Medication Safety


Workshop on Surgical Safety



Workshop on safe Spill management


Workshop on Hand hygiene



Workshop on Bio-medical Safety

Interactive workshops were held by the various departments and vendors. Essay and poster contests conducted among staff and students and, winners awarded.


Workshop on HIC Safety


Chengalpattu Government Medical College & Hospital takes the Pledge



# World Patient Safety Day

# at Chengalpattu Government Medical College & Hospital,

# Chengalpattu, Tamilnadu, India 18-Sep-2019

செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை

**உலக நோயாளி பாதுகாப்பு தின நிகழ்ச்சி - 17-செப்டம்பர்-2019**

மருத்துவ சிகிச்சையில் எவருக்கும் தீங்கு நேர்ந்துவிடக்கூடாது என்பதை மையகருத்தாக கொண்டு உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation WHO) இந்த ஆண்டு முதல் செப்டம்பர் 17-ஆம் தேதி அன்று உலக நோயாளி பாதுகாப்பு தினமாக கொண்டாட திட்டமிட்டுள்ளது. உலகெங்கும் 194 நாடுகளில் கொண்டாடப்படும் இந்த தினம் இந்தியாவிலும் பல இடங்களில் கொண்டாடப்பட்டது.




முதன்மையான மருத்துவ சேவைகளை மக்களுக்கு அளிப்பதில் முன்னோடியாக விளங்கும் தமிழகத்திலும் இத்தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நோயாளிகள் பாதுகாப்பு பற்றிய சிந்தனை மருத்துவம் பயிலும் மாணவரிடத்திலும் விதைக்கப்படவேண்டும் என்ற சீரிய எண்ணத்துடன் செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை செப்டம்பர் மாதம் 17-ஆம் தேதி அன்று இது தொடர்பான நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



நிகழ்ச்சியை தொடங்கிவைத்து பேசிய கல்லூரியின் Dean (FAC) டாக்டர். ஜி.ஹரிஹரன் அவர்கள் அரசு மருத்துவமனைகளில் நிலவும் சூழலில் அனைவரும் ஒருங்கிணைந்து நோயாளிகளுக்கு

பாதுகாப்பான சிகிச்சையை அளிக்கவேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். மருத்துவ கல்வி பாடங்களோடு சேர்த்து நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை பாதுகாப்பான முறையில் அமைப்பது பற்றி மாணவர்கள் கற்கவேண்டியதன் இன்றியமையாமையை எடுத்துரைத்த கல்லூரியின் மூத்த பேராசிரியர் டாக்டர்.சண்முகசுந்தரம் அவர்கள், மருத்துவமனையில் அணைத்து ஊழியர்களும் முதல்தர சேவைகளை நோயாளிகளுக்கு அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.




கன்சார்டியம் ஆப் அக்ரடீடெட் ஹெல்த்கேர் ஆர்கனைசஷன்ஸ் (Consortium of Accredited Healthcare Organisations - CAHO) அமைப்பின் துணை செயலாளர் டாக்டர்.அனுராதா பிச்சுமணி அவர்தம் உரையில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின்போது ஏற்படக்கூடிய எதிர்பாரா இடர்பாடுகளை உண்மை சம்பவங்களைக்கொண்டு விவரித்து, அவற்றை தவிர்க்கும் யுக்திகளையும் சுட்டிக்காட்டினார்.

கன்சார்டியம் ஆப் அக்ரடீடெட் ஹெல்த்கேர் ஆர்கனைசஷன்ஸ் (Consortium of Accredited Healthcare Organisations - CAHO) தேர்ந்த NABH ஆய்வாளர்களை கொண்டு மருத்துவமனைகளுக்கான பல்வேறு துறைகளுக்கேற்ற வகுப்புகளை வடிவமைத்து, செய்முறை விளக்கங்கள், கலந்துரையாடல்கள், கேள்வி-பதில் நேரம் என பல்வேறு யுக்திகள் மூலம் மருத்துவ தரக்கட்டுப்பாடு மேம்பாடுகளை நாடுமுழுவதும் பல மருத்துவ கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் அளித்து வருகிறது. இதன் கீழ் இயங்கும் Centre for Quality Promotion - CQP- எனும் தரமேம்பாட்டு மையங்கள் மூலம் மற்ற மருத்துவமனைகளுக்கு தரக்கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவது CAHO நிறுவனத்தின் நோக்கமாகும். CAHO அமைப்பின் 25 CQP-களில் ஒன்றான செங்கல்பட்டு ஸ்ரீ ரெங்கா மருத்துவமனையின் வாயிலாக பல தரமேம்பாட்டு பயிற்சிகள் மருத்துவ பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் CAHO நிறுவனம் நடத்திவருகிறது.



மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்தின் தலைமை பாதுகாப்பு அதிகாரி திரு. நாசர் அவர்கள் உரையாற்றுகையில் பாதுகாப்பு குறித்த குறைபாடுகளின் அடிப்படைகளையும், அவற்றை சீர் செய்யும் முறைகளையும் பற்றி பேசினார்.

செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் உலக நோயாளி பாதுகாப்பு தின சிறப்பு நிகழ்ச்சிகளாக தீயணைப்பு கோட்பாடுகள், மருந்தகத்தில்

பாதுகாப்பு விதிகள், அறுவை அரங்க கோட்பாடுகள், மருத்துவ சுகாதாரம், பரிசோதனைக்கூட பாதுகாப்பு முறைகள் மற்றும் பாதுகாப்பு கவசங்களின் முக்கியத்துவம் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன. உலக ஆரோக்கிய நிறுவனத்தின் SAVE LIVES: Clean your hands பிரச்சாரமும் இந்நிகழ்ச்சியில் தொடங்கப்பட்டது.


















செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின்அணைத்து ஊழியர்களுக்கும் கட்டுரை மற்றும் வரைபட போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.




பங்குபெற்ற அனைவரும் நோயாளிகளுக்கு பாதுகாப்பான சிகிச்சையளிப்பதற்கு உறுதிமொழி ஏற்று கையொப்பமிட்ட மடல் ஒன்றும் தயாரானது.

